
மேலும் இலவச பிரதிகளுக்கும்,
இலவச பத்திரிகை பிரதிகளுக்கும்
எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.






இந்தியாவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத்
தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk

# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இதழ் 17

- ★ நாவை அடக்குதல்
- ★ ஆபிரகாமின் குமாரனுகிய ஈசாக்கு
- ★ மாட்டிக் கொண்டதே
- ★ "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்
ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்
பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# நாவை அடக்குதல்

### அறிமுகம் வேதவாசிப்பு யாக்கோபு 3ம் அதிகாரம்

ஒரு மனிதனை விட யானை 50 மடங்கு பலம் வாய்ந்தது எனலாம், ஆயினும் ஒரு பாகன் அதை அடக்கிவிடக்கூடும். பாகனை மாவுத்தன் எனவும் அழைப்பர். இதன் மூல வார்த்தையான 'மஹா மத்ரா' என்ற சமஸ்கிருத பதத்திற்கு 'அதிக அளவில் பெற்றிருப்பவர்' என்று பொருள்.



பொதுவாக யானைப் பாகன்கள் நன்கு பழக்கப்படுத்தப்பட்ட யானையை நடத்த அங்குசம் எனும் ஒரு கூரிய வளைவுள்ள கோலைப் பயன்படுத்தி, யானைத் தலையின் பின் பாகத்தை லேசாகச் சுரண்டுவார்கள்.

இப்படிப்பட்ட அநேக வனவிலங்குகளைப் பற்றின நுணுக்கமான அறிவை மனிதன் பெற்றிருப்பதால் அவை மனிதனால் அடக்கப்பட்டு அவனுடைய கட்டுக்கு அடங்குகின்றன. தன் 91வது வயதில் மரித்த புகழ்வாய்ந்த ரஷ்ய சர்க்கஸ் வீராங்கனை ஜரினா புக்ரிமோவா சிங்கங்களை சர்க்கஸ் மேடையில் அடக்குவதிலேயே தன் வாழ்நாளையெல்லாம் கழித்தாள். சிங்கங்களைப் பொறுத்த மட்டில் அவளது வெற்றிக்குக் காரணம் மனவலிமை என்றாள். "நான் சிங்கத்தின் கூண்டிற்குள் சென்று வேலையை ஆரம்பிப்பேன், வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமாயின், என்னவெல்லாம் நான் செய்ய வேண்டுமென விரும்பினேனோ, அதையெல்லாம் செய்தேன், அவைகளும் கீழ்ப்படிந்தன, ஏனென்றால் அவைகள்



அதைச் செய்ய வேண்டுமென்று விரும்பினேன்" என்றாள். சிங்கங்கள் மிகப் பலம் வாய்ந்த, வேகமான, மற்றும் பயங்கரமான இரைகொல்லிகளின் வகையைச் சார்ந்தவை. இருப்பினும் வழக்கமாக சிங்கங்களை அடக்குபவன் கூண்டிற்குள் ஒரு நாற்காலி மற்றும் அவன் பயிற்சியைத்துணையாகக் பலம் வாய்ந்த

சிங்கங்களை அடக்குவதைக் காணலாம். ஒரு சாதாரண நாற்காலியைக் கொண்டு ஒரு சிங்கத்தை அடக்கிவிடலாம். ஏனென்றால் அந்த விலங்கு நாற்காலியின் நான்கு கால்களை மட்டுமே பார்க்கிறது. அந்தக் கால்களின் மீது தன்கால்வரிசையைக் காட்ட (தாக்க) முனைகிறது. வேகமாக நகரும் கடிகாரம் போல அதன் கவனம் நாற்காலியின் ஒரு காலிலிருந்து இன்னொரு காலுக்குத் தாவுகிறது. இந்தக் கால்களை மாற்றிப் மாற்றிப் பார்ப்பதிலேயே முழுகவனத்தையும் செலுத்தி, கடைசியில் குழம்பிப் போய் ஆடாமல் அசையாமல் நின்றுவிடுகிறது.

யாக்கோபு இப்படி எழுதினார்: ("சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு." நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.

அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம், தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா ? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச் செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா ? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது *(யாக்கோபு 3:7-12).*

நம் தேவன் நமக்குக் கொடுத்த நாவைத் தவறாகவே பயன் படுத்துகிறோம் என்பதை அடிக்கடி காண்கிறோம். ஆனால் இப்படி இருக்கக் கூடாது என யாக்கோபு நமக்கு அறிவுரை கூறுகிறார். நாம் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டு நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது. நீதிமொழிகளிலிருந்து எடுக்கப்பட்ட இப்பகுதி 'நாவைக் கட்டுக்குள் கொண்டு வருவதன்' முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

''மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் பிரியப் படுகிறவர்கள் அதின்கனியைப் புசிப்பார்கள்." (நீதிமொழிகள் 18:21). (கீழ்க்கண்ட பாடம் நாவை அடக்குவதற்கான சில உதவிக் குறிப்புகள் தரும்)

**நாவின் சக்தி**

நம் நாவின் அசைவிலே நம் நித்திய ஜீவன் நிர்ணயிக்கப்படுகிறது. ஏனெனில் அது "சாவுக்கேதுவான விஷத்தை" வெளிவிடுகிறதாயிருக்கிறது. வார்த்தைகளில் வல்லமை இருக்கிறது.

சுவிசேஷத்தின் வல்லமை நிறைந்த வார்த்தைகளைக் கேட்பதினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படக் கூடும். தேவனுடைய வார்த்தையை இன்னும் அதிகமாய்க் கேட்டு, அதில் நம்மை மூழ்கிக் கொள்வதன் மூலம் நம் விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது.

தாக்கத்தை அல்லது மாற்றத்தை ஏற்படுத்தும், சக்தி வார்த்தைகளுக்கு உண்டு. ஆதாம் ஏவாளினால் பாதிக்கப்பட்டான். தாவீது அபிகாயிலின் வார்த்தைகளினால்



நன்முறையில் பாதிக்கப்பட்டான்.

நாவினால் தவறாக உதிர்க்கப்பட்ட வார்த்தைகள் கேட்போருக்கு அழிவுக்கேதுவான விளைவுகளை உண்டாக்கும்.

"பட்டயக்குத்துகள் போல் பேசுகிறவர்களும் உண்டு" (நீதிமொழிகள் 12:18) ஒருவர் மீது கவலையீனமாய் பேசப்பட்ட வார்த்தைகள் அவரைக் குத்தி, காயப் படுத்தி பட்டயம் கொல்வது போல் அழித்துவிடவும் கூடும். அனனியாவைப் போல் பொய் சொல்லவும் அல்லது உண்மை பேசவும் நாவுக்கு சக்தி உண்டு.

நன்மை பயக்கும் வகையில் கண்டிக்கவும் (நீதிமொழிகள் 28:23) அல்லது தவறான லாபத்திற்காக முகஸ்துதி செய்யவும் நாவால் கூடும். (நீதிமொழிகள் 6:24)

நீதிமொழிகளின் இலட்சியப் பெண், "ஞானம் விளங்கத் தன் வாயைத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது." (நீதி 31:26)

"நீதிமானுடைய நாவு சுத்த வெள்ளி" (நீதிமொழிகள் 10:20).

கோபத்தை எழுப்பக்கூடிய சக்தி படைத்த நாவு, அமைதிப்படுத்தும் வல்லமையும் பெற்றுள்ளது. "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." (நீதிமொழிகள் 15:1)

இறுதியாக, நினைவில் கொள்ளுங்கள்: ''ஆரோக்கியமுள்ள நாவு ஜீவ விருட்சம்." (நீதி 15:4)

இந்தப் பாடத்தில் நாவு எங்ஙனம் அடக்கப்பட்டு கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வரப்படக் கூடும் என ஆராய்கிறோம். ஏனெனில் "ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும், மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்." (நீதி மொழிகள் 15:2).

மேலும் நாவுக்கெதிரான இந்த யுத்தத்தில் நாம் தனியாயில்லை. "மனதின் யோசனைகள் மனிதனுடையது; நாவின பிரதியுத்ரம் கர்த்தரால் வரும்." (நீதி 16:1).

நம் வாழ்க்கையில் நன்மைக்கேதுவாக அல்லது கேட்டிற்கேதுவாக நாவு இருக்கக்கூடிய மூன்று காரியங்களைக் காணலாம்.

சம்பவம் 1. அன்றாட வாழ்வில் நம் வாழ்க்கைத் துணையிடம்.

சம்பவம் 2. சபைசார்ந்த வாழ்க்கையில் நம் சகோதர சகோதரிகளோடு

சம்பவம் 3. நாம் பணியாற்றும் இடத்தில் சக பணியாளர்கள், நமக்குக் கீழ் பணிபுரிவோர் மற்றும் மேலதிகாரிகளிடத்தில் நம் வாழ்க்கை.

**சம்பவம் 1.**

**பெற்றோரின் வன்மையான நாவுகளால் சிதறடிக்கப் படும் குடும்பம்.**

கிறிஸ்டடெல் ஃபியன் வீடுகள் ஒன்றில் நீ வளர்ந்துவருகிறாய். உன் பெற்றோர் ஓயாமல் விவாதித்துக் கொண்டும் ஒருவர் மேல் ஒருவர் கூச்சலிட்டுக்

கொண்டுமிருக்கிறார்கள். அது உன்னை எவ்விதத்தில் பாதிக்கிறது ?

தம்பதியரிடையே கொஞ்சம் வாக்குவாதம், சண்டைகள் வருவது சகஜம் தான். ஆனால் இவை சீக்கிரத்திலேயே நிறுத்தப்படாவிடில் திருமண பந்தத்தையே அழித்து விடும். ஒரு சிறு தீப்பொறி ஒரு முழுக்காட்டையே கொளுத்திவிடுவதுபோல, தவறான வார்த்தைகள் திருமணத்தை எரித்துச் சாம்பலாக்கி விடும். நல்ல செய்தி என்னவெனில் நம் உடலிலுள்ள சாவுக்கேதுவான உறுப்பைப் பாதுகாக்க வேதாகமம் பதில்களைத் தருகிறது.

உன் வாழ்க்கைத்துணை தன் கட்டுப்பாட்டை இழந்துகத்துகிறாள். நீ செய்த ஏதோ ஒன்று அவள் கோபத்திற்குக் காரணமாயிருக்கலாம். அல்லது அவள் முன்கோபி அல்லது அறிவுபூர்வமாகச் சிந்திக்கவில்லை. நீ என்ன செய்ய வேண்டும் ?



அ). உன் வாழ்க்கைத்துணையை தன் சத்தத்தைக் குறைத்துக்கொள்ளச் சொல்.

ஆ). உன் வாழ்க்கைத்துணையை நிறுத்தச் சொல், அறிவுபூர்வமாகப் பேசும்படி (செயல்படும்படி) வேண்டிக்கொள்.

இ). நீ எவ்வளவு மனக்காயப்பட்டிருக்கிறாய் என்பதை அவருக்கு / அவளுக்குத் தெரிவிக்க முயற்சி செய்.

ஈ). விவாதித்து உன் கருத்தை எடுத்துச் சொல். இது தொடராதபடி அவரின் / அவளின் தவறுகளை எடுத்துக்காட்டு.

உ). அந்த இடத்தை விட்டு வெளியேறி, சமாதானம் நிலைக்கத் தக்கதாக விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வை.

கீழ்க்கண்ட நடைமுறை ஆலோசனைகள் உங்களுக்கு உதவலாம்



கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம் வாழ்க்கையில் நிஜமான ஒன்றாக இருக்க வேண்டும். இந்த பயம் இல்லாவிட்டால், வாழ்க்கை அர்த்தமற்றதாகிறது. இந்த பயம் தான் நம் வாழ்க்கையில் "தீமையை விட்டுவிலக" நமக்கு ஞானம் தருகிறது. சரியான அறிவும் புரிந்துணர்வும் இருந்தால் தான் மேற்கண்ட கேள்விக்கு நாம் சரியான பதிலைத் தரமுடியும். யோபு இவ்விதம் கூறுகிறார். "மனுஷனை நோக்கி: இதோ, ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம், பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி" என்றார். (யோபு 28:28)



மேற்கண்ட கேள்விக்கான பதில் கூறத் தேவையான உதவிக்குறிப்புகளையும் நீதிமொழிகள் புத்தகம் தருகிறது. உன் வாழ்க்கைத் துணையின்கோபம் எரிச்சலடைந்த பிடிவாதமான யானையைப் போலிருந்தால், நீ பாகன் (மாவுத்தன்) என்றால் உன்னுடைய இரகசிய 'அங்குசம்' யாது ?

பதில்: "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். " (நீதி 15:1)

ஆம், மெதுவான பிரதியுத்தரத்தில் தான் அங்குசம் இருக்கிறது. நடைமுறையில் என்ன "மிருதுவான பிரதியுத்தரத்தை உன் வாழ்க்கைத்துணைக்குத் தருவாய் ? முதலாவது, செய்யக்கூடாதது எது ? ஏன் ? என்பதைக் காண்போம்."

உன் வாழ்க்கைத் துணையிடம் 'வாயை மூடு' என்று சொல்வது தான் மிக மிக மோசமான செயல் - தவறான வார்த்தைகள் மேலும் அதிக மோசமான விளைவிற்குத்தான் காரணமாகிறது.

"கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதி மொழிகள் 15:1)

உன் கணவன் முக்கியமான ஒருவரைக் காணவேண்டிய ஏற்பாட்டை அவருக்கு நினைவூட்ட நீ மறந்து போனதினிமித்தம் அவர் உண்மையிலேயே கலக்கமடைந்து, அந்த மிக முக்கியமான சந்திப்பிற்குக் கால தாமதமாய்ப் போய் விட்டதனால் உன்மேல் உண்மையிலேயே கோபமாயிருந்தால், நீ வேலையில் எவ்வளவு மும்முரமாய் இருந்தாய் நீ சுகவீனமாய் இருந்ததால் நினைவுபடுத்த இயலவில்லை... இத்யாதி..... இத்யாதி எனக் கூறி உன்னையே நீயாயப்படுத்த, முயலாதே, கடந்த காலத்தில் நீ எத்தனை தியாகம் செய்தாய் என்பதோ, உன்கணவன் திருமண நினைவுநாளை மறந்தார் என்பதோ பதிலடி கொடுப்பதாகாது. பதிலடி (பழிவாங்குதல்) கொடுக்காதே / உன்னை நீயே பாதுகாத்துக்கொள்ளாதே/ உன்னை நீயே நியாயப்படுத்திக் கொள்ளாதே. அதே சமயம் தொடர்ந்து கத்துவதை அனுமதிக்காதே. குழந்தைகளுக்கு அது நல்லதல்ல. ... உன் வாழ்க்கைத் துணையோடு உட்கார்ந்து காரணகாரியங்களை அலசி ஆராயலாம், ஒருவருக்கொருவர் சற்று வித்தியாசப்படலாம். அடுத்தவர் துன்பத்தைப் புரிந்தவராய் மனதளவிலாவது அதில் பங்கு கொள்ளலாம்.



உணர்வுப் பங்கீடு உன் வாழ்க்கைத் துணை கடந்து சென்று கொண்டிருக்கும் ஏமாற்றத்தின் விளைவான எண்ணக் குலைவைப் புரிந்துணர்ந்து கொள்! நீயே இப்பொழுது அதிக அழுத்தத்திற்குள்ளாகியிருந்தாலும், உன் வாழ்க்கைத் துணையின் கோபம் நியாயமற்றதாயிருந்தாலும், ஒரு வேளை உன்மேல் குற்றமே இல்லாதிருந்தாலும் அவர் உணர்வைப் பகிர்ந்துகொள்.

கோபமுற்ற / பசியுள்ள சிங்கத்திடம் நியாய அநியாயம் பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஆண்/பெண் சிங்கம் அமைதியாய் இருக்கும்போது, திருப்தியடைந்திருக்கும்போது அறிவுபூர்வமாய்ப் பேசுவதற்கு நேரம் கண்டுபிடி. நடந்த காரியத்திற்காக வருத்தப்பட்டு, மிருதுவான, கனிவான வார்த்தைகளால் அதைத் தெரிவி. உன் வாழ்க்கைத் துணையின் உணர்ச்சிகளை நீ மதிக்கிறாய் என்பதையும் அவரை/அவளை நீ நேசிப்பதோடு பிரியப்படுத்தவும் விரும்புகிறாய் என்பதையும் காட்டு.

### தாழ்மை, தியாகம், பொறுமை :

உன் வாழ்க்கைத் துணையின் தற்போதைய தேவைகளைப் புரிந்துணர்ந்துகொள். நீ சரியாகவே இருந்தாலும், அமைதியைக் காக்கவேண்டும். தாழ்மை அவசியம்! இயேசுவானவர் குற்றஞ்சாட்டப் பட்டபோது, அவர் பயமுறுத்தாமல் அமைதியாய் இருந்தார் என்பதை நினைவில் கொள். (1 பேதுரு 2:23) சுயக்கட்டுப்பாட்டையும் அடக்கத்தையும் காட்டு. குதித்து ஆர்ப்பாட்டம் செய்து உன்னைத் தற்காத்துக் கொள்ளாதே. அப்படிச் செய்வதில் பாவம் செய்யவும் செய்யாதே. மென்மையான / மிருதுவான / அன்பான செயலில் நிலைத்திரு அவர் கோபம் முற்றிலும் அடைங்கும்வரை. அதிகமாகக் கோபமடையச் செய்யக்கூடியதாயினும், தாழ்மையும் பொறுமையும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். "நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம், இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்." நீதிமொழிகள் 25:15) என்பதை நினைவில் கொள்க.

பின் ஒரு பொழுதில் கலந்துரையாடு புயல் ஒய்ந்து, போதுமான நேரம் கடந்த பின் (அந்த நாளின் மாலை அல்லது மறுநாள்) தீர்வு காண்பதற்கென பிரச்சினையைக் குறித்துக் கலந்துரையாடு. பிரச்சினையை அலட்சியப் படுத்தினால் தீர்வு காண முடியாது. வெற்றிகரமான (மகிழ்ச்சியான) எந்த ஒரு உறவுக்கும் பின்னறிதகவல் (Feed back) அவசியம். அன்பபெனும் சுவாலை தொடர்ந்து எரியச் செய்வது முக்கியம். கோபம் / கசப்பு / வெறுப்பை உனக்குள்ளேயே வைத்திருப்பது உறவு அனலை விரட்டும் குளிர்ச்சிதான் மிஞ்சும். மென்மையாகவும், அமர்ந்த தொனியிலும் பேசுக. இந்த சூழ்நிலை மறுபடி வராதபடி என்ன செய்யக் கூடும் எனயோசி. நீ பேசும் தொடர்பில் இருக்கிறாயா என்பதை உறுதி செய்துகொள்.

அறிக்கை செய் உன் திருமணத்தை தேவன் ஆசீர்வதிக்கும் படி தேவனிடம் ஜெபம் செய். உங்கள் திருமணத்தின் அன்பின் சுவாலையை அணைக்க முயலும் புயலை மேற்கொள்ள இருவரும் சேர்ந்து ஜெபியுங்கள்.

கணவன்கள், மனைவிகள், ஆகிய இரு சாராரும் நாவை அடக்குவதற்கான பொன்விதிகள்!

கணவன்மார் தியாகம் செய்யுங்கள் - *"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து.... தம்மைதாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்." (எபேசியர் 5:25).*

*மனைவிகள் கீழ்ப்படியுங்கள் - "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது*



*போல உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபேசியர் 5:22)*

பொறுமையையும் மன்னித்தலையும் கடைப்பிடியுங்கள்.

*"ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (கொலோ 3:13)*

### கேள்விகள்

1. தங்களிடையே ஏற்பட்ட சச்சரவைத் தங்களுக்குள்ளேயே தீர்த்துக்கொண்டு, சமாதானத்தை எவ்விதம் கொண்டுவந்தார்கள் எந்தத் தம்பதியினராவது கூறுவீர்களா? அந்த சமாதானம் நிலைத்ததா?
2. ஒரு விவாதத்திற்குப் பின் (வாய்ச்சண்டை) என்ன அசாதாரண செயல்கள் செய்து கணவன் தன் அன்பை மனைவிக்கு வெளிப்படுத்துக் கூடும்?
3. ஒரு மனைவி தன் கணவனைப் பிரியப்படுத்த என்ன செய்யலாம்?

   உதவிக் குறிப்புகள்: அன்பு காட்ட முந்திக் கொள்ளுதல், கணவனுக்குப் பிரியமான உணவை சமைத்தல்/வாங்கிக் கொடுத்தல், நச்சரிப்பதை விட்டுவிடுதல் முதலியன.
4. (தும்பதியருக்கிடையில் அல்லாத) ஒரு சந்தர்ப்பத்தில் மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றிய ஓர் எடுத்துக்காட்டு தரமுடியுமா?

நாவை அடக்காமல் விட்டுவிடும் பொழுது, கட்டுக்கடங்காத கோபம் விரைவில் வன்முறையாக மாறும். கணவன் மனைவியை அடிக்கிறான். இந்த நிலைக்கு ஒரு உறவு செல்லும் போது என்ன செய்யவேண்டும்?

### சம்பவம் - 2 கோபம் கொண்ட சகோதரன்



பொறுப்பிலுள்ள ஒரு சகோதரன் சத்தமாகப் பேசுவதோடு அவரின் உறுதியான சித்தத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறவர் என்பது தெரிந்த விஷயம்தான். சபையின் கூட்டமொன்றில், தன் கருத்தை அழுத்தமாக முன்வைக்கும் போது தன் நிலை இழந்து கோபப்படுகிறார் ஆகவே விவாதம் ஏற்படுகிறது - நீ என்ன செய்ய வேண்டும்?

அ) அமைதி காக்கும்படி சகோதரர்களிடம் கூற வேண்டும்.

ஆ) கூட்டத்திலிருந்து வெளியேற வேண்டும்.

இ) நிதானத்தை இழந்து கோபப்படுவது தகுதியானதல்ல என சகோதரர்க்கு

நினைவு படுத்த வேண்டும்.

ஈ) அமைதியான பார்வையாளனாயிரு செய்யக் கூடிய பாதுகாப்பான காரியம் அதுதான்.

உ) கூட்டத்தை இன்னொரு நாளுக்குத் தள்ளிவை.

சபைக் கூட்டமானது ஒரு மிருகக் காட்சிசாலையாக மாறிவிட்டது எனலாம். சிறுத்தைகள், சிங்கங்கள் மற்றும் புலிகள் மத்தியில் இருப்பது போல் உணர்கிறாய். நீ என்ன செய்ய வேண்டும்?

கீழ்க்கண்ட நீதிமொழிகள் வசனங்களில் விடை காணலாம்.

- சமாதானம் கொண்டு வரும் நோக்கில், சபையாரின் அறிவுபூர்வ மற்ற நிலையில் நீ உன் நிதானத்தை இழந்துவிடாதே.

“நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்” (நீதிமொழிகள் 15:18)

- குற்றத்தைச் சுட்டிக்காட்டவோ உன்னை நியாயப்படுத்திக் கொள்ளவோ அவசரப்படாதே.

*“மனுஷனுடைய விவேகம் அவன் கோபத்தை அடக்கும்” (நீதிமொழிகள் 19:11)*

பேசு, ஆனால் அந்த சந்தர்ப்பத்திற்குப் பொருந்தக் கூடிய சரியான வார்த்தைகள் தானா என உறுதிப்படுத்திக்கொள். ஏற்கனவே நன்கு நிதானித்து தியானித்தால் ஞானத்தால் மட்டும் இந்த வார்த்தைகள் உன்நாவில் வரும்.

*“ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்.” (நீதிமொழிகள் 25:11)*

*“மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும். ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!” (நீதிமொழிகள் 15:23)*

- சமாதானத்திற்கேதுவாக நீ ஏதோ ஒன்றை சொல்ல வேண்டுமானாலும் மௌனம் பொன்போன்றது என்பதை அறிந்த புத்திசாலியாக இருக்கவேண்டும். சரியான சமயத்தில் மட்டும் பேசு.

*“சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்.” (நீதிமொழிகள் 10:19)*

*“தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால் அவனை நம்புவதைப் பார்க்கிலும் மூடனை நம்பலாம்.” (நீதிமொழிகள் 29:20)*

- சுயக்கட்டுப்பாட்டுடனும் அடக்கத்துடனும் வார்த்தைகளைப் பேசு. “அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான், விவேகிகுளிர்ந்த மனமுள்ளவன்.” (நீதிமொழிகள் 17:27).

- நீ பேச வேண்டிய முறை வரும்போது, உன் வார்த்தைகள் கேட்பவர்களுக்கு



இனிமையானவையாகவும் ஏற்றுக் கொள்ளப் படத்தக்கவையாகவும் இருக்கும்படி உறுதி செய்து கொள். அன்பினால் பிரச்சினையைத் தீர்க்க முயலவேண்டுமே தவிர வெறும் மூளை அறிவினால் அல்ல.

“இனிய சொற்கள் தேன்கூடு போல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்.” (நீதிமொழிகள் 16:24)

- நீ பேசும் வார்த்தைகள் தேவ ஞான முள்ளவையாக இருக்கட்டும் நீ கூறும் வார்த்தைகளிலுள்ள ஞானத்தை மக்கள் காணத்தக்கதாக அவ்வார்த்தைகளைக் கூறு.

“நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்.” (நீதிமொழிகள் 10:31)

- இனிமையான வார்த்தைகளென்றால் அவை முகஸ்துதியாகவோ பொய்களாகவோ இருக்கவேண்டு மென்று பொருளல்ல. இந்த இரண்டுமே கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.

*“ஆறுகாரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன்: மேட்டிமையான கண், பொய் நாவு....” (நீதிமொழிகள் 6:16-18)*

*“தன் நாவினால் முகஸ்துதி பேசுகிறவனைப் பார்க்கிலும், கடிந்து கொள்ளுகிறவன் முடிவில் அங்கீகாரம் பெறுவான்.” (நீதிமொழிகள் 28:23)*

சுருங்கச் சொல்லின், தியானத்தின் மூலமாகவும், வாழ்க்கைதரும் அநுபவங்கள் கற்றுத்தருவதன் மூலமாகவும் ஞானமுள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தும் நுட்பமான முறைகளில் நாம் பயிற்சிபெற வேண்டும். “அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்ல வேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.” (கொலோ 4:6)

**கேள்விகள்**

சபையின் ஐக்கியத்திலிருந்து ஒருவரை நீக்கும் பிரச்சினை பற்றி விவாதிக்க சபையின் உறுப்பினர்கள் கூடுகிறார்கள். சகோதரர் மத்தியில் கருத்து வேறுபாடு உண்டாகிறது. சில சகோதரர்கள் சபையிலிருந்து ஒருவர் நீக்கப்படுவதற்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். சிலர் முடிவெடுக்காமல் அமைதலாயிருக்கிறார்கள். மற்றவர்கள் அந்த சகோதரனை ஐக்கியத்திலிருந்து நீக்கப்படக்கூடாது என்பதில் உறுதியாயிருக்கிறார்கள். விவாதம் சூடு பிடிக்கிறது, குழுக்களாகப் பிரிகின்றார்கள். இந்த சூழ்நிலையை எவ்வாறு கையாளுவாய்?

சில காரியங்கள் செயல்படுத்தும் முறை குறித்து உனக்கும் சில சகோதரருக்குமிடையே சச்சரவு ஏற்படுகிறது. சமீபத்திய சம்பவம் ஒன்றில் நீ உன் கருத்தில் உறுதியாயிருக்கிறாய்; அதன் விளைவாய் ஐக்கியத்தில் ஒரு பிளவு உண்டாகிறது. நீ என்ன செய்ய வேண்டும்?

**சம்பவம் 3**

**கடினமான எஜமான் / மேலதிகாரி**

உன் எஜமான் ஒரு வெற்றிகரமான தொழிலதிபர். தொழில் நுட்பத்தில் வல்லவர், அதிகமாக வாசிப்பவர் என்பதோடு அதிகமாகப் பயணிப்பவருங்கூட.



தன் சாதனைகளைக் குறித்துப் பெருமிதம் கொள்ளும் அவர், உன்னைத் தன் பணியாளர்களில் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டார். அவருக்கடியில் பணி புரிவதில் உனக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. பணி நேரத்திற்குப் பின்னும் உன்னை வேலை செய்ய வைக்கிறார். அதற்கான ஈட்டுத்தொகையும் கொடுப்பதில்லை. பல ஞாயிற்றுக்கிழமைகளில், பொதுவிடுமுறை நாட்களில் வேலை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறாய். அவருக்குக் கொஞ்சம் எரிச்சல் வந்தாலும், காட்டுக் கத்தல் கத்தி உன்னைப் பயமுறுத்துகிறார். உனது தற்போதைய நிதிநிலைமை மற்றும் நெருக்கடிகளினால் வேலையினின்று நின்று கொள்ளவும் உன்னால் முடியாது. நீ என்ன செய்ய வேண்டும்? சிங்கத்தை (உன் எஜமானை) எப்படி அடக்கப்போகிறாய்?

அ) தெளிவான உறுதியோடு பேசு. உன் உரிமைகளை அவருக்கு நினைவூட்டு

ஆ) “இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு இதைப் பொறுத்துப் கொள்வேன். என் பொறுப்புகளை நிறைவேற்றி முடித்த பின்பு, நான் இன்னொரு வேலையைத் தேடிக்கொள்வேன்”

இ) உன் எஜமான் நிதானமாய் அமர்ந்திருக்கும் போது அவரிடம் பின்னறி தகவல் (feedback) கொடு. அவர் சத்தத்தை அதிகமாய் உயர்த்திப் பேசும் போதும், குடும்பம் மற்றும் இறைவழிப்பாட்டுக் கூட்டங்கள் ஆகியவற்றை ஒதுக்கி நீண்ட நேரம் வேலை செய்ய வைக்கும்போதும் எவ்வளவாய் உன் மனம் துன்புறுகிறது என அவரிடம் சொல். சற்றுக் கனிவாயிருக்கும்படி வேண்டிக் கொள். மிகச் சிறப்பாகப் பணிபுரிவதாக உறுதி கூறு.

ஈ) அடிக்கடி உன் எஜமான் எப்படி வெற்றிமேல் வெற்றி பெறுகிறார் என்பதை அவருக்கு நினைவூட்டும்போது, அவரிடம் நீ சந்தோஷமாக வேலை செய்கிறாய் என்றும் அவருடைய வெற்றி உனக்கு ஊக்கமளிக்கிறது என்றும் சொல்.



உ) கடினமாய் உழைத்து அவர் தயவைப் பெற முயல வேண்டும். அவர் உன்னில் இன்னும் குறை கண்டுபிடித்துக் கொண்டிருந்தால், மேலும் கருத்தாக வேலை செய்வதோடு, உன் நல்ல செயல்களால் என்றாவது ஒருநாள் மனம் மாறுவார் என்ற நம்பிக்கை கொண்டு எந்தவேலையையும் நீயாக முன்வந்து எடுத்துச் செய்.

ஊ) ஒரு முட்டாளுக்கு வேலை செய்வதைவிட, என்ன வந்தாலும் சரி (சிறை செல்வதாயினும்) அதை எதிர்கொள்வாய். ஆகவே வேலையை விட்டுவிட்டாய்.

நல்ல செய்தி என்னவெனில் சாதாரண சிங்கங்களை அடக்கிவது சாத்தியமே. “ராஜாவின் கோபம் மரணதூதருக்குச் சமானம். ஞானமுள்ளவனோ அதை ஆற்றுவான்” (நீதிமொழிகள் 16:14)

வேதவாக்கியங்களின்படி அமைந்த கீழ்க்கண்ட ஆலோசனைகள் தரப்படுகின்றன.

கடினமான உன் எஜமானை ஒரு ராஜா என எண்ணு. அவர் கடினமானவராயிருப்பதால், அவருக்கு இருக்கும் அதிகாரத்தில் எந்த ரூபத்திலும் அவர் உன்னை வேலையினின்று நீக்கி விடலாம். ஒரு ராஜாவிடம் எப்படி நடந்துகொள்வது. ராஜா உன்மீது பயங்கரங்களைப் பொழியலாம். ஆசீர்வாதங்களையும் பொழியலாம்.

“ராஜாவின் உறுக்குதல் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்குச் சமானம். அவனைக் கோபப்படுத்துகிறவன் தன் பிராணனுக்கே துரோகம் செய்கிறான்” (நீதிமொழிகள் 20:2)

“ராஜாவின் கோபம் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்குச் சமானம்; அவனுடைய தயை புல்லின்மேல் பெய்யும் பனிபோலிருக்கும்” (நீதிமொழிகள் 19:12)

உன் எஜமானை / மேலதிகாரியைப் புரிந்துணர்ந்து கொள். எது அவருக்குப் பிரியம். எது அவருக்குப் பிடிக்காதது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள். உன் எஜமானைப் பிரியப்படுத்துவதில் உறுதியாயிரு. - முகஸ்துதியினாலல்ல ஆனால் புரிந்துணர்வு மற்றும் விடா முயற்சியின் மூலமாகப் பிரியப்படுத்து உன் எஜமான் / மேலதிகாரி காலந்தவறாதவராயின், 5 நிமிடங்கள் முன்னதாகவே அவரிடம் போய் நின்றுவிடு. அவர் டென்னிஸ் பற்றி அதிகம் பேசுபவராயின். அது பற்றி அன்றைய தினம் வரையுள்ள செய்திகைத தெரிந்து வைத்திரு. காகிதங்கள்



அங்குமிங்கும் கிடப்பது அவருக்குப் பிடிக்காதெனில் அந்த இடத்தை எப்போதும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திரு. நீ எந்நிலையில் இருந்தாலும் சரி - மேலாளர் / அலுவலக உதவியாளர் / செயலாண்மையர் வேலையாள் - இப்படி யாராக நீ இருந்தாலும், உனக்குமேல் வைக்கப்பட்டிருப்பவரைப் பிரியப்படுத்து.

''ராஜாவின் தயை விவேகமுள்ள பணிவிடைக்காரன் மேலிருக்கும் அவனுடைய கோபமோ இலச்சையுண்டாக்குகிறவன் மேலிருக்கும். (நீதிமொழிகள் 14:35)

நவீன கூட்டமைப்பு உலகில் (விசேஷமாகப் பன்னாட்டு நிறுவனங்களில்) ஒருவர் தன் மேலதிகாரியை சகப்பணியாளர்களில் ஒருவராகவே காணக்கூடும். அவரோடு நல்லதொரு உறவும் கொள்ள உலகில் சில சமயங்களில் மோசமான மேலதிகாரிகளோடு பணிபுரியவேண்டியிருக்கும். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். நாம் முதன்முதலாகக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள். அதை நம் வாழ்க்கையில் செய்து காட்ட வேண்டும். கூட்டமைப்பு உலகம் நமக்கு உலகப்பிரகாரமான வெற்றி, பாதுகாப்புணர்வு மற்றும் பெருமையைக் கற்றுத் தரலாம். ஆனால் கிறிஸ்துவோ தாழ்மையைக் கற்பித்தார். அவர் ராஜாவும் அனைவருக்கும் மேலான மாபெரும் மேலதிகாரியாயிருந்தும், எழுந்திருந்து தம் அடியவர்களின் (சீஷர்களின்) பாதங்களைக் கழுவினார். முக்கிய கருத்து என்னவெனில் உன்சகஊழியர்களும் உன் மேலதிகாரியும் உன்னில் கிறிஸ்துவைக் காணவேண்டும்.

- நீ ஒரு தாழ்மையான வேலையிலிருக்கும் போது உன் மேலதிகாரியால் சிறுமைப்படுத்தப்படலாம். நீ உன் மேலதிகாரியை எப்படி அடக்குவாய்? வேலையில் கருத்தாயிரு, உண்மையாயிரு, கடினமாக உழைத்திடு. உன் உண்மைத் தன்மையைத் (நம்பகத் தன்மையை) தொடர்ந்து காத்துக்கொள். தவறுகள் செய்யாதே பேதுரு இவ்வாறு எழுதுகிறார். *"நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப் படும்போது பொறுமையோடே சகித்தால் அதனால் என்ன கீர்த்தியுண்டு நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்." (1 பேதுரு 2:20)* வார்த்தைகளை விட செயல்கள் உரத்துப் பேசுகின்றன. நீ எவ்வளவு பெரியவனென்று பெருமை பாராட்டாதே. பிறர் உன்னைப் புகழட்டும். நீயே உன் எக்காளத்தை ஊதி ஆர்ப்பரிக்காதே.

*''ராஜாவின் சமுகத்தில் மேன்மை பாராட்டாதே, பெரியோர்களுடைய ஸ்தானத்தில் நில்லாதே. உன் கண்கள் கண்ட பிரபுவின் சமுகத்தில் நீ தாழ்த்தப்படுவது நல்லதல்ல. அவன் உன்னைப் பார்த்து மேலேவா என்று சொல்வதே உனக்கு மேன்மை."* (நீதி 25:6-7)



திறவுகோல் யாதெனில் நற்கிரியைகள். உன் மேலதிகாரியிடம் மட்டுமல்ல சக, ஊழியர்களிடம் மற்றும் உனக்குக் கீழ் பணிபுரிபவர்களிடமும் தான். அன்பின் ஆவியில் எத்தனை பேரிடம் முடியுமோ அத்தனை பேரின் தயவைப் பெற்றுக்கொள். அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கூட நாம் அடங்கிப் போக வேண்டும்.



*"துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்த மாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு" (தீத்து 3:1-2)*

உன்னோடும் தேவனோடும் முற்றிலும் உண்மையாக நேர்மையுடனிரு. சரியான நோக்கத்தோடு நற்கிரியைகளைச் செய். தற்காலிகமான இந்த உடல்களில் நாம் வாழும் காலத்தில் கிறிஸ்தவர்களாக, நாம் நம் அயலாரை நேசிக்கவும் அவர்களுக்குப் பிரியமாக நடக்கவும் கட்டளையிடப்பட்டுள்ளோம். அன்பினால் செயல்கள் செய்யப்படவேண்டும். மேலதிகாரி இருக்கும்போது ஒருவிதமாகவும், அவர் இல்லாத போது இன்னொரு விதமாகவும் நாம் நடக்கக்கூடாது. நீ நேர்மையுள்ள வனாயிருந்தால், உன் நிறுவனத்தின் / மேலதிகாரியின் நன்மையைக் கருதி பணியாற்றுபவராயிருந்தால், உன்மேலதிகாரி உன்மேல் இன்னும் அதிக நம்பிக்கை கொள்வார். *எடுத்துக்காட்டு:* உன் மேலதிகாரி இல்லாதவேளையில் கணிணி விளையாட்டுகள் விளையாடுவது அல்லது உன் மேலதிகாரி செல்லும் வழியில் தரையைச் சுத்தம் செய்ய ஆரம்பிப்பது முதலியன. நம் ஒவ்வொரு செயலையும் எப்போதும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கிற நித்தியராஜா ஒருவர் நமக்கிருக்கிறார். இந்த விஷயத்தில் பவுல் நமக்குச் சரியான புத்திமதி தருகிறார்.

*"வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்." (கொலோசேயர் 3:22-24.)*

*"நீதியுள்ள உதடுகள் ராஜாக்களுக்குப் பிரியம்; நிதானமாய்ப் பேசுகிறவனில் ராஜாக்கள் பிரியப்படுவார்கள்."* (நீதிமொழிகள் 16:13)

- சோர்ந்து போகாதே. நம் நம்பிக்கை உறுதியானது தேவன் தமது நீதியிலிருந்தும் வாக்குத்தத்தங்களிலிருந்தும் தவறமாட்டார். கடைசியில் கட்டுப்பாடு தேவன் கரத்திலுள்ளது. உன் உண்மையையும் கருத்தான வேலையையும், உன்னிலுள்ள ஒளியையும் மேலதிகாரி கவனிக்காது பொல்லாதவராயிருந்தால் நீதியாய் ஆளுகிறவரும் நியாயாதிபதியுமான தேவன் திட்டமாய் உனக்குப் பலனளிப்பார்!

*"ஆளுகை செய்கிறவனுடைய முகதரிசனத்தைத் தேடுகிறவர்கள் அநேகர்; ஆனாலும் அவனவனுடைய நியாயம் கர்த்தராலே தீரும்."*

- தேவன் தன் கையில் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறார். பயமோ கவலையோ

கொள்ளாதே.

*"ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது; அதைத் தமதுசித்தத்தின்படி அவர் திருப்புகிறார்." (நீதிமொழிகள் 21:1)*

- பாவாமில்லாத ஒரு எஜமான் / மேலதிகாரி உனக்கிருந்தால் (அடிப்படையில் பொல்லாதவராயில்லாதவர்) மேற்கூறியவை சாத்தியமாகும். உன் ஒளி பிரகாசிப்பதும் சுலபம்.

நீ புரிந்து கொள்ளவேண்டியவையாவன:

*"ராஜாவின் தயை விவேகமுள்ள பணிவிடைகாரன்மேலிருக்கும், அவனுடைய கோபமோ இலச்சையுண்டாக்குகிறவன் மேலிருக்கும்." (நீதிமொழிகள் 14:35.)*

*"ராஜாவின் கோபம் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்குச் சமானம்; அவனுடைய தயை புல்லின்மேல் பெய்யும் பனிபோலிருக்கும்." (நீதிமொழிகள் 19:12)*

*"சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள் ராஜா அவனுக்குச் சிநேகிதனாவான்." (நீதிமொழிகள் 22:11)*

*"தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்." (நீதிமொழிகள் 22:29).*

**கடைசியாக:**

*"புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப் படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள்" (1 பேதுரு 2:12).*

*"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:21).*

*"நன்மையை ஜாக்கிரதையுடன் தேடுகிறவன் தயையைப் பெறுவான்; தீமையைத் தேடுகிறவனுக்கோ தீமையே வரும்" (நீதிமொழிகள் 11:27).*

**<u>கேள்விகள்</u>**

8) உன் எஜமான்/ மேலதிகாரியுடன் உனக்கு ஏற்பட்ட நல்ல நடை முறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளமுடியுமா? அவற்றில் மேற்கூறிய அல்லதுவேறு வசனங்கள் எப்படிப் பொருந்துகின்றன எனக் கூறவும்.

9) நாவின் வேறு சில காரியங்கள் இப்பாடத்தில் நாம் பார்க்க வில்லை. அவைகளில் சிலவற்றைப் பட்டியலிடுவதோடு அவை நம் நித்திய ஜீவனுக்கு எங்ஙனம் சாதக, பாதகமாகிறது எனக் கூறமுடியுமா? உதவிக்குறிப்பு: சபித்தல், பொய் பேசுதல், கோள் சொல்லுதல், அதிகம் பேசுதல், அவசரமாகப் நிதானமின்றி பேசுதல் முதலியன.

10) அடக்கப்பட்ட நாவின் கனிகளை கூறுக.

11) நீ ஒரு மேலதிகாரியாயிருந்தால் எப்படி நடந்து கொள்வாய்? மக்கள் உன்னை அடக்கப்பட வேண்டிய சிங்கமாகக் காண்பார்களா?

12) நாவை அடக்குவது சாத்தியம் தானா? அல்லது ஏன் முடியாது? ஆயத்தம் செய்தவர்: சகோதரன் லினஸ் தானியேல்.



# ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கு

அதிகாலையில் அப்பா என்னை எழுப்பினார். அவர் கோபமாயிருப்ப தாகத் தோன்றியது. ஒழுங்குப்படுத்துவதில் அவர் அவசரப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது இளம் வாலிப வயதிலிருந்த எனக்கு சூரியோதயத்தில் சுறுசுறுப்பாக இயங்குவது மிகவும் முன்கூட்டி செயல்படுவதாகும். அப்பா சொன்னார்: "நாம் ஒரு மலைக்குச் செல்லுகிறோம். மூன்று நாள் பயணமாகையால் உணவும், தண்ணீரும், பிரயாணத்திற்காக மிருகங்களை ஆயத்தப்படுத்த ஆண் வேலையாட்களும் நமக்குத் தேவை."

நாங்கள் விடைபெற்றபோது அம்மா அமைதியாயிருந்தார். எனது பெற்றோர் முதியோராயிருந்தபோதிலும், தமாஷாகவும் சிரித்துக்கொண்டும் இருப்பார்கள். எனது பிறப்பு அவர்களுக்குச் சிறப்பான மகிழ்வை அளித்தது என எனக்கு நன்றாய்த் தெரியும். அவர்களுக்குத் தேவனால் வாக்களிக்கப்பட்ட பிள்ளை நான். இறுக்கமாக என்னை அணைத்த என் தாய், என்னைப் போகவிடத் தயங்குவது போலத் தோன்றியது. ஆனால் கூடார வாசலிலிருந்து நாங்கள் விடைபெறும் போது புன்னகைத்தாள்.

**பயணத்தின் முடிவு**

முதல் இரு நாட்களும் மகிழ்ச்சிகரமாயிருந்தன. வனாந்தரத்திலிருந்து பசுமையான சமவெளிப் பகுதிகள், புல்வெளிகள் மற்றும் நீரோடைகளுக்கு நாங்கள் நடந்து சென்றோம், ஆனால் அப்பாவால் மோரியா என்றழைக்கப்பட்ட மலையில் நாங்கள் ஏறியபோது நில அமைப்பு வெட்டாந்தரையாய்க் காணப்பட்டது.

நூறு வயதுக்கும் மேற்பட்டவரான தந்தை வீரை தீறமுடையவராயிருந்தாலும் மலையேறுவது அவருக்குக் கடினமாயிருந்தது. அடிக்கடி நின்ற அவர் மிகவும் அழுத்தத்தோடு காணப்பட்டார். நாங்களிருவரும் நன்றாக ஏற முடியுமென கூறிய தந்தை, மலையடிவாரத்தில் வேலையாட்களை நிறுத்திவிட்டார். தேவனிடம் ஜெபிக்கும்படி நாங்களிருவரும் மலைக்குச் செல்வதையே அவர் விரும்பினார்.

அவர் எடுத்துக்கொண்டு வந்த மரக்கட்டைகளையும் நெருப்புப் பாத்திரத்தையும் நான் கவனித்தேன். உணவைச் சமைப்பதில் அவை பயன் படுமென நான் முதலில் நினைத்தாலும், அவை ஒரு பலிக்கான பொட்டலம் எனப் பின்பு தெரிய வந்தது. தேவனுக்கு நாங்கள் பலி செலுத்துவதைப் பற்றி அறிந்தவனாகவே நான் வளர்ந்தேன். பரலோகத்தின் தேவனுக்கு தங்களது வாழ்நாளெல்லாம் எனது பெற்றோர் உண்மையுள்ளவர்களாய் இருந்திருக்கிறார்கள்.

நான் சிறு குழந்தையாயிருக்கும்போதே, தேவன் விசேஷித்த வாக்குத்தத்தங்களை அவர்களுக்கு அளித்துள்ளதை எனக்குப் போதித்திருக்கிறார்கள். அவரது விசுவாசம் மற்றும் அவரது உண்மைக்காக எனது தந்தையை ஒரு சிநேகிதனாகவே தேவன் கருதினார்.

## ஆட்டுக்குட்டி எங்கே?

நான் அந்தக் கேள்வியை எப்போது கேட்டேன் என்பது எனக்கு நினைவில்லை. பலிக்கான ஆட்டுகுட்டி எங்கே இருந்ததென என்னால் கண்டுகொள்ள இயலவில்லை, ஆனால் தேவன் அதைக் கொடுப்பாரென தந்தை பதிலளித்தார். தேவன் மீது அப்படிப்பட்ட விசுவாசத்தை அவர் வைத்திருந்தார். எனவே தொடர்ந்து செங்குத்தான மலை மேல் ஏறினோம். மலை உச்சியை அடைந்தபின் நானும் தந்தையும் பலிக்கான பலிபீடத்தைக் கட்டினோம். மரக்கட்டைகளை முறைப்படி அடுக்கினோம். ஆயினும் இன்னும் ஆட்டுக்குட்டியைக் காணோம், பின்பு திடீரென கீழே அமர்ந்த தந்தை விளக்கத் துவங்கினார். என்னைக் காணிக்கையாகப் பலியிடுமாறு தேவன் அவரைக் கேட்டுக்கொண்டதாகக் கூறினார்! அவருடைய கீழ்ப்படிதலுக்கும், அதே போல என்னுடைய கீழ்ப்படிதலுக்கும், அது ஒரு சோதனை.

இரு மனிதர்கள் அந்த அளவுக்கு இதுவரை ஒருபோதும் துன்பப்பட்டதில்லை. நீண்ட நாள் காத்திருந்து பெற்ற அவரது நேச குமாரனாகிய என்னைக் கொல்ல வேண்டுமென்ற சிந்தனையால் தந்தையும், தந்தையின் விருப்பத்துக்கு ஒப்புக் கொடுத்து அவர் என்னைப் பலிசெலுத்த அனுமதிப்பதால் நான் கடந்து செல்ல வேண்டிய அனுபவத்தைக் குறித்து நானும் கதிகலங்கினோம். தந்தையை நான் தடுத்திருக்கலாம். அவர் வயதானவர் நானோ வாலிபன். அவ்விடத்தை விட்டு ஓடியிருக்கலாம். அல்லது கத்தியை அவரது கரத்திலிருந்து பறித்திருக்கலாம்.

எனது தந்தையின் வித்தைக் குறித்து தேவன் எனது தந்தைக்கருளிய வாக்குத்தத்தங்களை வெகு நேரமாய் விவாதித்துக் கொண்டிருந்தோம். அவரது சந்ததியினர் ஆகாயத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப்போலவும் திரளாயிருப்பார்கள். நாங்கள் இருவரும் புரிந்து கொண்டு விசுவாசித்த உயிர்த்தெழுதலைப் பற்றி பின்பு பேசினோம். ஒருவேளை என் தகப்பனார் என்னை பலி செலுத்தின பின்பு தேவன் மரித்தோரிலிருந்து என்னை உயிரோடே எழுப்புவார். அவரது கட்டளைக்கு ஏற்ற காரணத்தை தேவன் வைத்திருக்கிறரென்றும் இறுதியில் கண்ணீரோடு நாங்கள் முடிவு செய்தோம். தேவன் விரும்பியபடி நாங்கள் முன்செல்ல வேண்டுமென்பதை நான் ஏற்றுக்கொண்டேன்.



## முட்புதரிலே ஆட்டுக்கடா

நாங்கள் வேலையைச் சேர்ந்தே செய்வோம். என் தந்தை என்னை மரக்கட்டைகளோடு சேர்த்துக் கட்ட நான் அனுமதித்தேன். எனக்குக் குறைவான வலி மட்டுமே ஏற்பட வேண்டுமென்பதற்காக மிகவும் கூர்மையாகத் தீட்டப்பட்டிருந்த கத்தியை என் தந்தை எடுத்தார். மிகுந்த பீதியடைந்தவனாய், ஆனால் என் தந்தை பயமுறாதபடி அமைதி காத்தவனாய் நடுங்கும் உடலுடன் கண்ணீர் தோய்ந்த முகத்துடன் அவர் கத்தியை ஓங்குவதைக் கண்டேன். அப்போது அது நடந்தது. உரத்த குரலில் அழுத்தமாக, “அபிரகாமே! ஈசாக்கைக் கொல்லவோ அவனுக்குச் சேதமுண்டாக்கவோ வேண்டாம்” என்ற குரலை நாங்களிருவரும் கேட்டோம். என் தந்தை அதிர்ச்சியில் துள்ளிக் குதித்தார். மறு முறை அதே கட்டளை வந்தபோது ஒரு தேவதூதனை நாங்கள் பார்த்தோம். *“உன் குமரனுக்குச் சேத முண்டாக்காதே. உனக்கு விலையேறப் பெற்றதாயிருக்கிற அனைத்தையும் தேவனுக்கு நிச்சயமாய் நீ கொடுப்பாயென அவர் இப்போது அறிந்திருக்கிறார்.”*

தேவன் ஒரு பலிப்பொருளைக் கொடுக்கத்தான் செய்தார். அருகிலிருந்த முட்செடிகளில் தன் கொம்புகள் மாட்டிக்கொண்ட ஒரு ஆட்டுக்கடா அங்கிருந்தது. அது பலியாக செலுத்தப்பட்டபோது நான் எப்படி உணர்ந்திருப்பேனென நீங்கள் கற்பனை செய்து பார்க்கலாம்! நான் வாழும்படிக்கும் சாகாதபடிக்கும் தேவன் முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார். மலை மீதான அந்த அனுபவங்கள் இந்த வல்லமையான, ஆனால் மிகவும் கரிசனையுள்ள தேவனுடனான எனது உறவைக் குறித்து என்னை ஆதிமாக யோசிக்க வைத்தன அவரது திட்டங்களில் நான் ஒரு விசேஷமான கருவியென்றால் அவரை இன்னும் சிறப்பாக அறிய நான் முற்பட வேண்டும்.

ஒருவேளை இந்தச் சம்பவத்திற்கு உருவக வடிவான ஒரு அர்த்தம் இருக்கலாம் அது என்ன எனக்குத் தெரியாது. தந்தையின் மனபாரம் மிகவும் குறைந்துவிட்டது. ஆனால் தாயாரிடம் நடந்ததையெல்லாம் அவர் விவரித்துச் சொல்ல வேண்டும். இந்த ஒரு காரியத்தை நான் கற்றுக் கொண்டேன். தேவனில் நம்பிக்கை வைப்பதும் அவர் கேட்டதைச் செய்வதும் கடினமானவைதான், ஆனால் அவற்றில் மிகுந்த பலனுண்டு.

**ஸிந்தியா மைல்ஸ்**

**ஆதியாகமம் 22 பார்க்கவும்.**

## மாட்டிக் கொண்டதே

'வீனஸ் பூச்சி கொல்லி' என்பது ஒரு தாவரம். ஈக்களையும் பூச்சிகளையும் பிடிப்பதற்கும் அவைகளை ஜீரணமும் செய்வதற்கும் சிக்கலான அமைப்புகளைப் பெற்றுள்ளது. இப்படிச் செய்ய அதற்கு யோசனை செய்ய முடியாது. ஏனெனில் அதற்கு மூளை கிடையாது.





(இத்தாவரம் 'திறந்தவாசல்' கொள்கையைப் பயன்படுத்தி, அதன் மதுவை ருசிக்க வரும் பூச்சிகளுக்காகக் காத்திருக்கிறது.



விஷயம் தெரியாமல் வரும் ஈ அல்லது பூச்சி, இத்தாவரத்தின் மேல் நீட்டியிருக்கும் ஊசி போன்ற சிறு அமைப்பின் மேல் உட்கார்ந்ததும், தாவரம் சட்டென்று மூடிக்கொள்ளும்.



*"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளத்தை நாறிக் கெட்டுப் போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவர்களைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" (பிரசங்கி 10:1).*

கனம் பெற்ற அறிவியலாளர்கள் அநேகர் உண்டு. ஆனால் அவர்களின் பரிமாணக் கொள்கையே அவர்கள் மதியீனம் வீனஸ் பூச்சி கொல்லி ஈக்களைக் கவர்கிறது, பிடித்துக்கொள்கிறது. உணவாக ஜீரணித்துக் கொள்ள விசேஷித்த ஜீரணநீர் சுரப்பிகளைப் பெற்றுள்ளது. இச்சுரப்பிகள் உடனேயே வேலை செய்கின்றன. அதிக மதிப்பிற்குரிய விரிவுரையாளர்களாலும் இதை விளக்க முடியாது. இந்தப் பூச்சி கொல்லி தாவரம் அறிவு கூர்மையுள்ள சிருஷ்டிகரால் வடிவமைத்து உருவாக்கப்பட்டது. வேறெந்த விளக்கமும் மதியீனமே - அது நாறுகிறது.



# "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"



விஞ்ஞானம் அதிகரிக்க, அதிகரிக்க வாழ்க்கை மிகவும் எளிதாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்டது. இது எந்த அளவிற்கு உண்மையென. நடமாடும் தொலைபேசி (Mobile) மற்றும் மின்அனுவியல் அஞ்சலை (e-mail) உபயோகிப்பவரை கேட்டால் புரியும். அதிக நேரம் ஓய்வும், பொழுதுபோக்கும் கிடைக்கும் என எதிர்பார்த்ததற்கு மாறாக, இந்நாட்களில் அலைசலகளையும், அழுத்தங்களையும் தவிர்க்கமுடிவதில்லை. ஓய்வுக்கோ, பொழுது போக்குக்கோ நேரம் இல்லை. நமக்கு இளைப்பாறுதல் தர ஒருவரால் முடியும் என கென் பர்ஹாம் (Ken Barham) விளக்குகிறார்.

**வேகமாய் ஓடுதல்:**

தொடரந்து மாறுதல்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கும் இந்த சமுதாயத்தில், அனுதின வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் மனபாரங்களோடும் அழுத்தங்களோடும், வேகமாய் செய்யபடுவது அதிக பிரத்யேகமாய் தெரிகிறது.

வேலையாட்கள் குறைக்கப்பட்டு குறைந்த வேலையாட்கள் மூலமாய் அதிக உற்பத்தி எதிர்பார்க்கப் படுகின்றன. நவீன தொழிற்நுட்பங்கள் அதிகரித்துகொண்டே வருகிறது. உதாரணமாக, கவனமாக சரியாக தொகுக்கப்பட்ட ஒரு கடிதத்திற்கு உடனடியாக மின்ஆஞ்சல் (e-mail) மூலமாக அனுப்ப முடியும். இதே வேலையை, சில காலத்திற்கு முன்பு அநேகரால், அநேக நாட்கள் செய்யவேண்டி இருந்தது.

இறுக்கமான வேலைதிட்டங்களும், போட்டிகளும் நிறைந்த இந்த உலகத்தில் ஊழியர்கள், தங்கள் வேலையை பிரித்து கொடுத்தலில், மற்றும் இடம் மாறுதல் இவற்றை சந்திக்க நேரிடுகிறது. அன்றாட தேவைகளை சந்திக்க, இருபத்தி நான்கு மணி நேரமும் திறந்து வைத்திருக்கும் அநேக விதமான பண்டக சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. எல்லாம் வேகம், வேகம், வேகம்.

**மாற்று சிகிச்சைகள்**

இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் முடிவு மன அழுத்தமும், இறுக்கமும் என தெளிவாக விளங்குகின்றது. இவை அதிகரித்துப் வருகிறது. மக்கள் அதிக நேரம் வேலைஸ்தலத்தில் இருந்து தங்கள் நேரங்களை செலவழிக்கும்படியாய் எதிர்பார்க்கப்படுகின்றனர். அலுவலக வேலைகளை வீட்டிற்கும் எடுத்துச் சென்று செய்யும்படியாய் எதிர்பார்க்கப்படுவது மட்டுமல்லாமல் விடுமுறை நாட்களில் அலுவலக அதிகாரிகளை தொடர்பு கொள்ளும் படியாய் எதிர்ப்பார்க்கப் படுகின்றனர். அதிக தூரம் பயணஞ்செய்வதும் தவிர்க்க முடிவதில்லை. சுருக்கமாய்

சொன்னால் தங்களுக்காக வாழாமல் தங்கள் வேலைகளுக்காகவே வாழ்கின்றனர்.

இவையெல்லாம் சிறியோரையும், பெரியோரையும், ஏழைகளையும், பணக்காரர்களையும் மனாதியான மற்றும் சரீரப்பிரகாரமான வியாதிகளுக்குள் அழைத்து செல்கின்றது. இதற்கு பரிகாரம் அநேகர் வழக்கமான மருத்துவ அப்பியாசங்களை விட்டு இப்போது ஹோமியோபதி, ரிப்ளெக்சாலஜி, மற்றும் ஊசி சிகிச்சை போன்றவற்றை நாடுகின்றனர். ஏதாவது ஒரு காரியத்தினால் தங்கள் அனுதின மன அழுத்தம் நீங்காதா ? என நினைக்கின்றனர்.

**விடிவு காணுதல்**

உண்மையான ஒரு கூற்று, என்னவென்றால், தற்போதைய மன அழுத்தத்தை பாரத்தை குறைக்கும்படியான மருந்து, புதிய சிகிச்சை முறையில் இல்லாமல், அதிக புராதன காரியத்தில் உண்டு. அது, நமக்கு திடனையும், நம்பிக்கையும் கொடுக்கும் கர்த்தருடைய வார்த்தைகள், இது ஒரு நம்பிக்கைக்குரிய மாற்று சிகிச்சையாக உள்ளது. இவற்றை பின்பற்றி, அநேக தலைமுறைகள் பயன்பெற்றிருக்கின்றன. வேதாகமம் நமக்கு பாவத்திலிருந்து விடுதலை கொடுப்பது மட்டுமல்லாமல், நம் துணைவரான இயேசுவோடு வாழ்வதை குறித்தும் போதிக்கிறது.

ஒரு புதிய வேறுபட்ட விடுதலையான வாழ்க்கையை நாம் வேதத்தை படிப்பதின் மூலமாகவும், ஜெபத்தோடு இயேசுவை உறுதியாக உண்மையாக கண்டுக்கொள்வதில் மூலமாகவும் பெற்றுக்கொள்ளமுடியும். அவருடைய வாக்குத்தங்கள் நமக்கு தைரியத்தையும் அளிக்கின்றது. இதை அவருடைய வார்தையின் மூலமாக கீழ்க்கண்டவாறு வாக்குத்தத்தமாக சொல்லியிருக்கிறார்.

மேலும், நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, *“கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.*

*ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்” **(லூக்கா 11:9,10)***

இயேசு நமக்கு மனதுருக்கத்தோடு உதவி செய்யும்படியாய் நம்முடைய கஷ்டங்களை புரிந்துக் கொள்ளும்படியாய் அவரே இந்த உலகத்தில் பாடுகளின் வழியாய் கடந்து போனார். நாம் நினைவு கூறும்படியாக நமக்காக செய்து முடித்த ஒரு காரியம் இது.

இந்த காரியத்தை குறித்து, இயேசு கிறிஸ்து இது உலகத்தில் தோன்றுவதற்கு முன்னமே ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார்.

*“அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாயிருந்தார். அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமற்போனோம்” **(ஏசாயா 53:3)***



**அவநம்பிக்கையல்ல, நம்பிக்கை**

எல்லா மனுஷருக்கும் நேரிடுகிற சோதனைகளெல்லாம் சகித்தும், இயேசு தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு உண்மையான குமாரனாக தம்மை வெளிப்படுத்தினார். கடவுளின் கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்கிறவர்களுக்கு வருகிற எல்லா சோதனைகளையும் எதிர்த்து நின்றார். பாவமில்லாமல் வாழ்ந்து ஜெயங்கொண்டார். அப்போஸ்தலனாகிய பேதுரு இது ஒரு வெற்றிகரமான காரியம் என்று இப்படியாய் எழுதுகிறார்.

*“நீங்கள் குற்றஞ்செய்து, அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு. நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்.*

*இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்” **(1 பேதுரு 2:21,22)***

இயேசு சிலுவையில் குரூர மரணமடைந்த போதும், வெற்றிசிறந்தார், மேலும் இவ்விதமாக உயர்த்தப்பட்டாரென்று அப்போஸ்தலன், எருசலேமிலிருந்தபோது இப்படியாய் எழுதினார்.

*“தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது” **(அப்போஸ்தலர் 2:24)***

வேறுவிதமாய் சொன்னால், பாவத்தின் சம்பளம் மரணம் என்பது தேவனின் நியாயத்தீர்ப்பு. இப்படியிருக்க பாவமே செய்யாத கிறிஸ்துவை கல்லறை அடைத்து வைக்க முடியவில்லை.

இந்த வெற்றி, அவரை பின்பற்றுகிற அனைவருக்கும் ஈவாக கொடுக்கப்பட்டுள்ளது. பெற்றுக்கொள்ள இயேசுவின் வருகை வரைக்கும் விசுவாச வாழ்க்கை வாழவேண்டும். விசுவாச வாழ்க்கை போராட்டம் நிறைந்ததாய் இருந்தாலும் அது அதிக நம்பிக்கைக் குரியதாய் இருக்கிறது. இந்த நம்பிக்கையின் அநேக நன்மைகளில், மேன்மையான காரியம் என்னவெனில், கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தினிமித்தம், நமக்கு மன அழுத்தத்திலிருந்தும், பொருளாதார உலகப்பிரகாரமான வாழ்க்கையிலிருந்தும் கிறிஸ்துவினால் விடுதலை உண்டு.

இந்த காரியத்தை, இயேசுவே தம்முடைய வார்த்தையில் இப்படி கூறியுள்ளார்.

*“வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.” நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது.” என்றார்.*